# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1813 - 2013 මැයි මස 31 වැනි වැනි සිකුරාදා - 2013.05.31

*1813 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 66 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.**- (i) மதுவரி (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) அற்றோணித் தத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, யூன் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# நானாவித அறிவித்தல்கள்

## தனது குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தும் போது கொழும்பில் நடைபெறுகின்ற மேல்மாகாண மேல் நீதிமன்றத்தில்

ஒடுக்குதல் பற்றிய அறிவித்தல்

வழக்கு இல. : எச். சீ. (குடியியல்) 16/ 2013/சீஓ
தன்மை : ஒடுக்குதல்
பெறுமதி : ரூபா 37,032,537/92

அதன்படி பதிவுசெய்யப்பட்ட அலுவலகம் நாவலப்பிட்டி, மொன்டி கிறிஸ்டோ எஸ்டேட்டில் அமைந்துள்ள சென்ட்ரல் ஹில்ஸ் பிலான்டேஷன் (பிறைவேட்) லிமிட்டட் ஒடுக்குதல் பற்றிய விடயம் தொடர்பானது;

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பாகத்தின் கீழும் அதன் பிரகாரமும் கனம் நீதிமன்றத்தின் மூலம் ஒடுக்குதலுக்கான விண்ணப்பம் பற்றிய விடயம் தொடர்பானது.

சிலோன் ரீ. புரோக்கர்ஸ் பீஎல்சீ இல. 43, ஜாவத்த வீதி, கொழும்பு - 05.

- மனுதாரர்-

குடியியல் நீதிமன்ற நியாயாதிக்கத்தை அமுல்படுத்தல் சம்பந்தமாக கொழும்பில் நடாத்தப்படுகின்ற மேல்மாகாணத்தின் மேல் நீதிமன்றத்தால் மேற்குறித்த கம்பனியை ஒடுக்குவதற்காக கொழும்பு 05, ஜாவத்த வீதி, 43 ஆம் இலக்க இடத்தில் அமைந்துள்ள சிலோன் ரீ புரோக்கர்ஸ் பீஎல்சீ கம்பனியால் 2013, மே மாதம் 02 ஆந் திகதி அந்நீதிமன்றத்திற்கு மனுவொன்று சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அம்மனு 2013, யூலை மாதம் 25 ஆந் திகதி நீதிமன்றத்தின் முன்னிலையில் விசாரணை செய்வதற்காக தேவைப்படுத்தப்பட்டுள்ளதெனவும், அம்மனு தொடர்பில் கட்டளையொன்றைச் செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு விரும்புகின்ற அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கும் அந்நோக்கத்திற்காக அவ்விசாரணையின் போது தனிப்பட்ட முறையில் அல்லது தனது சட்டத்தரணி மூலம் தோற்ற முடியுமெனவும், மனுவின் பிரதியொன்று அவசியமாகின்ற கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுதொகை செலுத்துநருக்கும் உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் மீது, கீழே கையொப்பமிடுபவரால் அது வழங்கப்படுமெனவும் இத்தால் அறிவிக்கப்படுகிறது :-

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
சட்டத்தரணிகள்,
இல. 216, டீ சேரம் இடம்,
கொழும்பு 10.

**குறிப்பு**.- அந்த மனு தொடர்பான விசாரணையின் போது தோற்றுவதற்கு எண்ணுகின்ற எவரேனும் ஆளொருவர் அல்லது செய்வதற்கான தனது எண்ணத்தை மேலே பெயர் குறிப்பிடப்பட்ட எவ். ஜே. அன்ட் ஜீ. த சேரம் சட்டத்தரணிகளுக்கு எழுத்துமூலம் அறிவித்து கையளிக்க வேண்டும் அல்லது அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். அறிவிக்கும் ஆளின் பெயர் மற்றும் முகவரியும், கம்பனியொன்றாயின் கம்பனியின் பெயர் மற்றும் முகவரியும் அறிவித்தலில் தெரிவிக்க வேண்டுமென்பதுடன், ஆள் அல்லது கம்பனியால் அல்லது அவரது அல்லது அவர்களின் (சட்டத்தரணி ஒருவர் இருப்பாராயின்) சட்டத்தரணியால் கையொப்பமிடப்பட வேண்டுமென்பதுடன், 2013, யூலை மாதம் 24 ஆந் திகதி பிற்பகல் 6.00 மணிக்கு முன்னர் கையளிக்க வேண்டும். அல்லது, அஞ்சல் மூலம் அனுப்புவதாயின், போதுமானதொரு காலத்துள் (மேற்குறித்த சட்டத்தரணிகளுக்கு) அவர்களுக்குக் கிடைக்கப்பெறக்கூடியவாறு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

எவ். ஜே. அன்ட் ஜீ. டீ சேரம்,
சட்டத்தரணிகள்.

5-857

---

## மனித உரிமைகள் அமைப்பைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

ஹுனைஸ் பாரூக், பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''மனித உரிமைகள் அமைப்பைக் கூட்டிணைப்ப தற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த நிறுவனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. மனித உரிமைகளையும் மனிதாபிமானத்தையும் அடிப்படை உரிமைகளையும் சனநாயகத்தையும் பாதுகாத்தல் ; அத்துடன்
2. மனிதாபிமானத்தையும் விளையாட்டுத்துறையையும் சமூக சேவையையும் வளர்க்கத் தூண்டுதல் ;

பிறவும்.

ஹுனைஸ் பாரூக்,
பாராளுமன்ற உறுப்பினர்.

5-881

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.